மே மாதம் 17ஆம் திகதி அன்று மவ்பிம பத்திரிகையின் முதல் பக்கத்தில் "பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் கருவின் முகத்திரையைக் கிழித்தார்" என்ற அர்த்தத்தை வெளிப்படுத்தும் தலைப்பில் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. அரசியலமைப்பு பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அழுத்தம் கொடுத்ததாக ஆணைக்குழுவின் தலைவர் அதன் அங்கத்தவர்களுக்குத் தெரிவித்ததாக தகவல் அறிந்த மூலங்களை சுட்டிக்காட்டி இச்செய்தி பிரசுரிக்கப்பட்டு இருந்தது. இந்த செய்தியறிக்கையை எழுதிய ஊடகவியலாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.இது தொடர்பாக தமது ஊடகப் பிரிவினூடாக ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில், மேற்குறிப்பிட்ட இந்த செய்தி "...தவறான மற்றும் தீங்கான செய்திகளை பிரசுரிப்பதற்காக ஊடகங்களை உபயோகிக்கும் நோக்குடன் வெளியிடப்பட்ட பொய்யான செய்தி" என கரு ஜயசூரிய தெரிவித்திருந்தார்.

எனினும், மே 18ஆம் திகதி அன்று மவ்பிம பத்திரிகையின் முதல் பக்கத்தில் 'கரு பொய் சொல்கிறார்" என்ற பிரதான தலைப்பில் ஒரு பதில் அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. இந்த செய்தியிலும் ஊடகவியலாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதில் கரு ஜயசூரியவினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் மே 17 அன்று தாம் வெளியிட்ட செய்தியறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அம்சங்கள் உண்மையானவை என்ற நிலைப்பாட்டில் தாம் இருப்பதாகவும், இது தொடர்பாக மவ்பிம பத்திரிகை எல்லாவற்றையும் நிரூபிக்கத் தயாராக இருப்பதாகவும், இது தொடர்பாக முடியுமானால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு கரு ஜயசூரியவுக்கு சவால் விடுப்பதாகவும் தெரிவித்திருந்தது. இது தொடர்பாக மே 18 திங்கள் அன்றே தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயலாளரினால் மவ்பிம பத்திரிகைக்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. மே 17ஆம் திகதி மவ்பிம பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி முற்றிலும் தவறான தகவல்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது என்றும், தேசிய பொலிஸ் ஆணைக்குழு குறிப்பிட்ட அந்த செய்தியை முழுவதுமாக மறுக்கின்றது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
மேலும், இந்த செய்தி பிரசுரிக்கப்படமுன்னர் மவ்பிம பத்திரிகையை சேர்ந்த எந்தவொரு ஊடகவியலாளரும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரையோ செயலாளரையோ தமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கு தொடர்பு கொள்ளவில்லை எனவும் இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.இது தொடர்பான எங்கள் அவதானிப்புகள்:முடியுமானவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய மூலங்களை மேற்கோள் காட்டுவதன்மூலம் செய்தியறிக்கையின் நம்பகத்தன்மை அதிகரிக்கும். எனினும் மூலங்களின் அடையாளத்தை வெளிப்படுத்த

வேண்டாமென்று குறிப்பிட்ட அந்த மூலங்கள் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் அவ்வேண்டுகோளுக்கிணங்க அவர்களது அடையாளத்தை வெளிப்படுத்தாமல் பாதுகாப்பது ஊடகவியலாளரின் விழுமியத்தோடு இணைந்த கடமையாகும். ஆயினும் யாதொரு மூலத்தினால் பெறப்படுகின்ற தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிசெய்வதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட நம்பத்தகுந்த மூலங்களைப் பரிசீலித்தல் சிறந்தது என ஊடக நெறிமுறைகள் கூறுகின்றன.

இந்த செய்தியைப்பொறுத்தவரையில், தாம் பெற்றுக்கொண்ட தகவல்களை குறித்த பொலிஸ் ஆணைக்குழுவில் பொறுப்பில் உள்ளவர்களிடம் உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்காததன்மூலம் மவ்பிம பத்திரிகை தவறு இளைத்துள்ளது. அதேவேளை செய்தியைத் தெரிவிப்பவரின் பெயரைப் பிரசுரிக்க இயன்றளவு ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். அப்படி செய்யாவிடின், செய்தியின் நம்பகத்தன்மை குறைந்துவிடும்.

இவ்வாறு பெயர் குறிப்பிடப்படாமல் பிரசுரிக்கப்பட்ட மேற்கண்ட மவ்பிம பத்திரிகையின் செய்தியறிக்கைக்கு அதன் ஆசிரியர் குழு பொறுப்பேற்க வேண்டும்.கரு ஜயசூரியவினால் 17ஆம் திகதி ஞாயிறு அன்று முதலில் பிரசுரிக்கப்பட்ட செய்தியறிக்கைக்கு வழங்கிய மறுமொழி, அது தொடர்பான பத்திரிகையின் நிலைப்பாடு, முன்னைய செய்திக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்துக்கு சமமான முக்கியத்துவத்தை மறுமொழிக்கு வழங்க மவ்பிம மேற்கொண்ட முயற்சி ஆகியவை சரியானதே. அதேவேளை, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கடிதத்தையும் பிரசுரிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் நாம் சுட்டிக்காட்டுகின்றோம்.

இறுதியாக, இந்த செய்தி தவறானது என்று சம்பத்தப்பட்ட இரு தரப்பினருமே உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தனர். மவ்பிம பத்திரிக்கை இது தொடர்பாக எடுக்கப்போகும் நிலைப்பாடு என்னவென்று வாசகர்களாகிய நாம் பார்த்துக்கொண்டு இருப்போம். இது தவறான செய்தி என்றால் இதன் துல்லியத்தன்மை தொடர்பாக மவ்பிம பத்திரிகை நெறிமுறைகள் தொடர்பான பாரதூரமான தவறை இளைத்திருக்கின்றது எனவும் நாம் சுட்டிக்காட்டுகின்றோம்.

**#MediaEthics #lka #SinhalaPress #Mawbima**